தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தேசிய சங்கல்பதினம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் தேசிய சங்கல்பதினம் அனுசரிக்கப்பட்டது. மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் நினைவு தினம் இன்று (31.10.2015) அன்று தீவிரவாதத்தை ஒழிக்கும் விதமாக அனுசரிக்கப்படுகிறது. 300 மாணவ மாணவியர் கலந்து கொண்ட பேரணி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் துவங்கி பல்கலைக்கழக ஆசிரியர் குடியிருப்பு, பூசாரிபாளையம் கேட் வழியாக பல்கலை வளாகத்தில் நிறைவடைந்தது. மாணவர்கள் தீவிரவாதத்திற்கு எதிராக குரல் எழுப்பினர். இதே நாளில் இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாள் தேசிய ஒற்றுமை தினமாக அனுசரிக்கப்பட்டது. இதற்கு மாணவர்கள் வேற்றுமையில் ஒற்றுமை காண உறுதிமொழி எடுத்ததோடு ஒற்றுமை ஓட்டம் நிகழ்ந்தது. ஊழல் எதிர்ப்பு விழிப்புணர்வு வாரம் 25 முதல் 31 அக்டோபர் வரை கடைபிடிக்கப்படுகிறது. நாட்டு நலப்பணி விளங்கவும், நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊழலில் ஈடுபடமாட்டோம் என்றும் ஊழலுக்கு எதிராக குரல் கொடுப்பதாகவும் மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

விழா ஏற்பாட்டினை ஒருங்கிணைப்பாளர் முனைவர். குமுதா மற்றும் இந்நிகழ்ச்சிகளை நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர்கள் லதா, சுகன்யா, கவிதா, வினோத், செந்தில்நாதன், ஹேமாவதி மற்றும் சத்திவேல் செய்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்